# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கரையோரம் பேணல் (திருத்தம்)

***1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் சட்டத்தைத் திருத்துவதற்கும் ; 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்தினதும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தினதும் குறித்தசில ஏற்பாடுகளைத் திருத்துவதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்***

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2011, ஒகத்து மாதம் 26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***119 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 33.00** **தபாற் செலவு : ரூபா 12.50**

2-PL 006212 -225 (2011/02)

*ச.வ.ஓ. 47/99*

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் சட்டத்தைத் திருத்துவதற்கும் ; 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத் தாபனச் சட்டத்தினதும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினதும் குறித்தசில ஏற்பாடுகளைத் திருத்துவதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, கரையோரம் பேணல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் சட்டத்துக்கான விரிவுப்பெயர், "கரையோரம் பேணலுக்கான வேலைத்திட்டங்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கரையோரம் பேணலுக்கான மற்றும் கரையோர மூலவள முகாமைக்கான வேலைத்திட்டங்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கச் சட்டத்துக்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் :-

(அ) "கரையோரம் பேணல் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டம்" என்னும் சொற்களும் ;

(ஆ) "கரையோரம் பேணல் பணிப்பாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைப் பணிப்பாளர் தலைமை அதிபதி" என்னும் சொற்களும் ;

*"கரையோரம் பேணல் சட்டம்", "கரையோரம் பேணற் பணிப்பாளர்", "பணிப்பாளர்" மற்றும் "கரையோரம் பேணல்" என்பன, "கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள*

2-PL 006212 -650 (2011/08)

முகாமைச் சட்டம்'', ''கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைப் பணிப்பாளர் தலைமையதிபதி'', ''பணிப்பாளர் தலைமையதிபதி'' அத்துடன் ''கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை'' என அறியப்படுதல் வேண்டும்.

(இ) ''பணிப்பாளர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''பணிப்பாளர் தலைமையதிபதி'' என்னும் சொற்களும்; அத்துடன்

(ஈ) ''கரையோரம் பேணல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை'' என்னும் சொற்களும்,

இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில் அல்லது வேறு ஆவணத்தில் ''கரையோரம் பேணற் சட்டம்'', ''கரையோரம் பேணற் பணிப்பாளர்'', ''பணிப்பாளர்'' மற்றும் ''கரையோரம் பேணல்'' என்பவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், முறையே ''கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டம்'', ''கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைப் பணிப்பாளர் தலைமையதிபதி'', ''பணிப்பாளர் தலைமையதிபதி'' அத்துடன் ''கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை'' என்பவற்றுக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

''(i) அத்தகைய எண்ணிக்கையினரான பணிப்பாளர்களும், பிரதிப் பணிப்பாளர்களும் மற்றும் உதவிப் பணிப்பாளர்களும் ;''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''நிறைவேற்றுவதற்கும் ; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''நிறைவேற்றுவதற்கும்;'' என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(இ) கரையோர வலயத்தினுள் நிறைவேற்றப்பட்டு வரும் செயற்பாடுகள் சம்பந்தமாக ஏனைய திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகள் என்பவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் ;

(ஈ) 12 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட கரையோர வலய முகாமைச் செய்திட்டத்தைத் தயாரிப்பதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் ;

(உ) பொதுமக்களுக்கும் மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கும், முகவராண்மைக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை பற்றிய தகவலைப் பரப்புவதற்கும் மற்றும் அவசியமானவிடத்து, மதியுரையையும் வழிகாட்டுதலையும் அளிப்பதற்கும் ;

(ஊ) பயனுள்ள கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக ஏனைய திணைக்களங்களினதும், முகவராண்மைகளினதும் மற்றும் நிறுவனங்களினதும் ஒத்திசைவுடன் ஆராய்ச்சி நடாத்துவதற்கும் ;

(எ) தேசிய கடற்றொழில் கொள்கையில் குறித்துரைக்கப்பட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும், ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"பணிப்பாளர் தலைமையதிபதி, சட்டத்தின்கீழான அவரது தத்துவங்கள்

5. பணிப்பாளர் தலைமையதிபதியானவர், விடயத்திற்கேற்ப, கரையோர வலயத்தின் ஏதேனும் பாகம் எப்பிரிவினுள் அமைந்துள்ளதோ அப்பிரிவின் எவரேனும் பிரதேச செயலாளருக்கு அல்லது

முதலியவற்றுள் எவற்றையும் பிரதேச செயலாளர் களுக்கு அல்லது விதித்துரைக் கப்பட்ட அலுவலர் களுக்குக் கையளிக்கலாம்.

விதித்துரைக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலருக்கு அதற்கென எழுத்திலானவோர் அதிகார வளிப்பின் மூலம், சட்டத்தின் III ஆம் பாகத்தினுள் அடங்குகின்ற ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி நீங்கலாக, இச்சட்டத்தினால் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக் கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல் லது பணியைக் கையளிக்கலாம். பிரதேச செயலாளர் அல்லது விதித்துரைக்கப்பட்ட பகிரங்க அலுவலர் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான பணிப்புக்களுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அத்தகைய பிரதேசச் செயலாளர் பிரிவினுள் அல்லது வேறு அதிகார இடப்பரப்பினுள் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை மதியுரைப் பேரவை.

6. (1) (இதனகத்துப்பின்னர் "மதியுரைப் பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை மதியுரைப் பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச் சுச் செயலாளர் ; இவரே தவிசாளராக விருத்தல் வேண்டும் ;

(ஆ) கொள்கைத் திட்டமிடல் என்ற விடயத் திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(இ) சுற்றுலாப்பயணத்துறை என்ற விடயத்திற் குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஈ) நகர அபிவிருத்தி என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(உ) பொது நிருவாகம் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஊ) தொழில்கள் என்ற விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(எ) மாகாண சபைகள் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஏ) சூழல் என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செய லாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஐ) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவளங் கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ஒ) 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள், ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட, தேசிய நீர்வாழ் உயிரின மூலவளங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ஓ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ஔ) 1981 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(க) 1992 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட, புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ங) காணி ஆணையாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ச) 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப் பாளர் தலைமையதிபதி; இவரே பேரவை யின் செயலாளராகவிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஞ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட வேறு மூன்று ஆட்கள்; அவர்களுள் ஒருவர், பல்கலைக்கழகங்களின் கல்விசார் பணி யாட்டொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்துவராகவும், ஒருவர் கரையோரச் சூழல் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும் மற்றும் மற்றையவர் மீன்பிடிக் கைத்தொழிலின் பிரதிநிதியொருவராக வும் இருத்தல் வேண்டும்.

(2) மதியுரைப் பேரவையானது அதன் அபிப்பிராயத்தின்படி, அதன் பணிகளைப் பயனுற ஆற்றுவதற்கு அவசியமாகவுள்ளதென அதற்குத் தோன்றுமிடத்து, அத்தகைய நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய காலத்துக்கு மதியுரைப் பேரவையின் உறுப்பினரொருவராகச் சேவையாற்றுவதற்கு வேறெவரேனும் செயலாளரை உடன் சேர்க்கலாம். இவ்வுட்பிரிவின் நியதிகளின்படி உடன்சேர்க்கப்பட்ட செயலாளரொருவர், அவரது சமூகத்தை அவசியமாக்கிய குறிப்பிட்ட கருமம் பற்றிக் கலந்துரையாடப்பட்டுக் கொண்டிருக்கும் வேளைகளில் மட்டுமே மதியுரைப் பேரவைக் கூட்டங்களில் சமுகமளித்தல் வேண்டும். அவர் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*''கரையோர வலயத்தினுள் மூலவளங்களை அளவை செய்தல்.*

11. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, செயல்முறைக்குகந்தாக இருக்கக்கூடியளவு விரைவாக, கரையோர வலயத்தினுள்ளான எல்லா வளங்களும் செயற்பாடுகளும் பற்றிய அளவையொன்று நடாத்தப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் அத்தகைய அளவையின் பெறுபேறுகளினது அடிப்படையின் மீதான அறிக்கையொன்றைத் தயாரித்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தேவைப்பட்ட அறிக்கையைத் தயாரிப்பதில், பணிப்பாளர் தலைமையதிபதி, அரசாங்கத் திணைக்களங்களினாலும், நிறுவனங்களினாலும் மற்றும் முகவராண்மைகளினாலும் சேகரிக்கப்பட்ட அல்லது தொகுக்கப்பட்ட இயைபான தரவையும் தகவலையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய அறிக்கையைத் தயாரிக்கும் நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியாயமான

முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் தரவை அல்லது தகவலைக் கொடுத்துதவுதல், அத்தகைய திணைக்களங்களின், நிறுவனங்களின் மற்றும் முகவராண்மைகளின் தலைவர்களினது கடமையாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) ''பணிப்பாளர்'' என்னும் சொல்லிலிருந்து "உள்ளடக்குதல் வேண்டும்:-" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, ''பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குப் பிந்தாமல், 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி நடாத்தப்பட்ட அளவையின் பெறுபேறுகளினது அடிப்படையின்மீது, (இதனகத்துப்பின்னர் "செய்திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கரையோர வலய மற்றும் கரையோர மூலவள முகாமைச் செய்திட்டமொன்றைத் தயாரித்து மதியுரைப் பேரவையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இச்செய்திட்டமானது, கரையோர மூலவளங்களை முகாமை செய்வதற்கான வழிகாட்டு நெறிகளையும், நிலைபெறுதகு அபிவிருத்திக்காகக் கரையோர மூலவளங்களைப் பேணுவதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டமொன்றையும், உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்குதலும் வேண்டும்.'' என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், (ix) ஆம், (x) ஆம் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களை இடுவதன் மூலமும் :-

"(ix) கமத்தொழில் ;

(x) தொழிற்றுறை ;

(xi) கரையோர மூலவளத்தின் கிடைக்கக் கூடிய தன்மை ;

(xii) கரையோர கடலரிப்பு முகாமை ;

(xiii) கரையோர நீர்த் தரம் ;

(xiv) கரையோர நீர்ப் பாவனையை வலயப் படுத்துதல் ; அத்துடன்

(xv) பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தின்படி, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைக்கு இயைபான வேறேதேனும் கருமம்." ;

(இ) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "நிகழ்ச்சித்திட்டம் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிகழ்ச்சித்திட்டம்;" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ஈ) அதன் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "விதப்புரைகள்," என்னும் சொல்லுக்குப் பதிலாக "விதப்புரைகள்;" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(உ) அதன் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஊ) மூலவள முகாமைப் பிரச்சினைகளின் பாரதூரமான தன்மை, உயிரினப் பல்வகைமை, ஒப்பேறக்கூடிய தன்மை மற்றும் பொருளாதார முக்கியத்துவம் என்பவற்றின் நியதிகளின்படி அத்தகைய அமைவிடங்களை வீதப்படுத்தி விசேட இடப்பரப்பு முகாமை அமைவிடங்களை அடையாளங் காண்கின்றவையான விதப்புரைகள் ;

(எ) பொதுமக்களுக்கு, கடற்கரையையும் கரையோர வலயத்தையும் அணுகுவதற் குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள அணுகுகைக்கான மார்க்கங்களையும், பாதைகளையும், இணைப்புப் பாதை களையும் அடையாளங்காணுதலும் மற்றும் அதன்கண்ணுள்ள எவையேனும் முட்டுக்கட்டைகளை அப்புறப்படுத்து வதற்குத் தேவையான வழிமுறைகளை விதந்துரைத்தலும் ;

(ஏ) கரையோர வலயத்தின் நிலைபெறுதகு அபிவிருத்திக்குத் தேவையான வழிகாட்டுநெறிகளை விதந்துரைத்தல் ; அத்துடன்

(ஐ) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் செயற்பாடுகள் தொடர்பாகக் கொள்கைகளை வகுத் தமைத்தலும் மற்றும் விதப்புரைகளைக் கொடுத்துதவுதலும்.";

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(1அ) பணிப்பாளர் தலைமையதிபதி, 12 ஆம் பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட செய்திட்டம், ஆகக்குறைந்தது ஐந்தாண்டுகளுக்கொரு தடவையாவது மீளாய்வு செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்:

ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, அவ்வாறு செய்வது அவசியமென அவர் கருதுமிடத்து, செய்திட்டம் மீளாயப்படும் நேரத்தில் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படியான அளவையொன்று நிறைவேற்றப் படுவதனைச் செய்விக்கலாமென்பதுடன், அவ்வாறு நடாத்தப்பட்ட அளவையின் பெறுபேறுகளினது அடிப் படையின்மீது செய்திட்டத்தை மீளாய்வும் செய்யலாம்.";

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், ''நான்கு ஆண்டுகளைக்கொண்ட'' என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக ''ஐந்து ஆண்டுகளைக்கொண்ட'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, ''கரையோர வலயத்தின் நீண்டகால உறுதிப்பாட்டையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கரையோரவலயத்தின் நீண்டகால உறுதிப்பாட்டையும் கரையோர வலயத்தினுள் உள்ள மூலவளங்களின் நிலைபெறுதகு தன்மையையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''கரையோர வலய முகாமைச் செய்திட்டத்திற்கும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கரையோர வலய மற்றும் கரையோர மூலவள முகாமைச் செய்திட்டத்திற்கும்''; என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''ஆகியவற்றின்மீது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஆகியவற்றின்மீதும் கரையோர வலயத்தினுள்ளான மூலவளங்களின் நிலைபெறுதகு தன்மையின்மீதும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் :-

''(1) பதின்நான்காம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கரையோர வலயத்தினுள் அபிவிருத்திச் செயற்பாடொன்றில் ஈடுபடுவதற்கான அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பமொன்றைப்

பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாக விடயத்திற் கேற்ப, தொடக்கச்சூழல் பரிசோதனை அறிக்கை யொன்றை அல்லது சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை யொன்றை அல்லது அத்தகைய அறிக்கைகள் இரண்டை யும் கொடுத்துதவும்படி விண்ணப்பதாரரைத் தேவைப் படுத்தலாம். அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கி யொழுகுதல் விண்ணப்பதாரரின் கடமையாதல் வேண் டும். ஒவ்வொரு தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கையும் அல்லது சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறிருப்பினும், அபிவிருத்திச் செயற் பாடுகளின் எந்த வகுதிகள் தொடர்பில் தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கையொன்று அவசியமாக விராதிருக்குமோ அந்த வகுதிகளை, அமைச்சர், ஒழுங்கு விதி மூலம் விதித்துரைக்கலாம்.

(2) தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கை யொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும் விடயங்களில், அவர், அத்தகைய அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன்மீதும், அத்துடன் அனுமதிப்பத்திரத்தை அளிப்பதா அல்லது இல்லையா என்பதனைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய அறிக்கை போதுமானதெனவும் காணப் படின், சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை வழங்க வேண்டுமென்ற தேவைப்பாட்டை விட்டுவிடலாம்.

(2அ) தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கை யானது, அனுமதிப்பத்திரத்தை வழங்குவதா அல்லது இல்லையாவென்பதைத் தீர்மானிப்பதற்குப் போதிய தாகவுள்ளதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருது மிடத்து, அவர், அத்தகைய அறிக்கையின் பிரதி யொன்றை, பேரவையின் கருத்துரைகள், எவையேனு மிருப்பின் அவற்றுக்காகப் பேரவையிடம் சமர்ப்பிக் கலாம்.

(2ஆ) பேரவையானது, தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கை அதனிடம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், அதன் கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2இ) பணிப்பாளர் தலைமையதிபதி, உட்பிரிவு (2அ)இன்கீழ் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கையொன்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், ஒரு முடிவைச் செய்வதற்குச் சூழல் தாக்குகை மதிப்பீட்டு அறிக்கையொன்று அவசியமாகவுள்ளதெனக் கருதுமிடத்து, அதனை அவரிடம் சமர்ப்பிக்கும்படி அவர் விண்ணப்பதாரரைத் தேவைப்படுத்தலாம்.

(2ஈ) பணிப்பாளர் தலைமையதிபதி, சூழல் தாக்குகை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன்மேல், அதன் பிரதியொன்றைக் குழுவிடம், அதன் கருத்துரைகளுக்காகச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம், அத்தகைய அறிவிப்புத் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் பொதுமக்களுக்கு, அது தொடர்பிலான கருத்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பொன்றை அளித்தலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "(3) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "உட்பிரிவுகள் (2ஆ), (2ஈ) மற்றும் (3) என்பவற்றின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "(3) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "உட்பிரிவுகள் (2ஆ), (2ஈ) மற்றும் (3) என்பவற்றின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, ''கரையோர வலய முகாமைச் செய்திட்டத்தை அல்லது கரையோரம் பேணலுக்கான ஏதேனும் வேலைத்திட்டத்தை கருத்திற்கொண்டு கரையோர வலயத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக கரையோர வலய மற்றும் கரையோர மூலவள முகாமைச் செய்திட்டத்தை அல்லது கரையோரம் பேணலுக்கான ஏதேனும் வேலைத்திட்டத்தைக் கருத்திற்கொண்டு, கரையோர வலயத்தின் மற்றும் அதன் கண்ணுள்ள மூலவளங்களின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

> "(3) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர மொன்று, பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றிக் கைமாற்றப்படுதலாகாது. பணிப்பாளர் தலைமையதிபதி, கைமாற்றமொன்றுக்கான அங்கீகாரத்தை அவர் அளித்துள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் மீது மேலதிக நிபந்தனைகளை விதிக்கலாம். விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது மட்டுமே கைமாற்றமொன்று செய்யப்படலாம். கைமாற்றம் பயனுள்ளதாகவிருப்பதற்கென, அனுமதிப் பத்திரத்தைக் கைமாற்றுகின்ற கட்டளையொன்றும் அனுமதிப்பத்திரத்தில் பதிலீடுசெய்யப்படுதல் வேண்டும்:
>
> ஆயின், எவ்வாறாயினும், பணிப்பாளர் தலைமையதிபதி, அனுமதிப்பத்திரத்தின் தொடக்க வழங்குகைத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதியொன்று கழிந்திருந்தாலொழிய, இப்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''கரையோர வலயத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "கரையோர வலயத்தின் அல்லது அதன்கண்ணுள்ள மூலவளங்களின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரிடம் சேர்ப்பிக்கச் செய்தலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் அனுமதிப்பத்திரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் கூறப்பட்ட முகவரிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அவரினால் அறிவிக்கப்பட்டவாறான அத்தகைய வேறு முகவரிக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பச் செய்தலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக் கப்பட்ட காலத்துக்குள்" என்னும் சொற்களிலிருந்து அப்பந்தியின் முடிவுவரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அளிக்கப்பட்ட ஏதேனும் நீடித்த காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றத் தவறுமிடத்து, பணிப்பாளர் அவ்வாளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை இல்லாதாக்கலாம். அத்தகைய இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தல், அதற்கான காரணங்களைக் கூறி, அனுமதிப்பத்திரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் கூறப்பட்ட முகவரிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அவரினால் அறிவிக்கப்பட்டவாறான அத்தகைய வேறு முகவரிக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "கரை யோரம் பேணல் என்னும் விடயத்துக்குப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை என்னும் விடயத்துக்குப்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைப் பெற்றதன்மேல், செயலாளர் உடனடியாக இயைபான எல்லா ஆவணங்களையும் கோப்புக்களையும் தமக்கு அனுப்பும்படி பணிப்பாளர் தலைமையதிபதியை தேவைப்படுத்துதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய வேண்டுகோள் பெறப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்காலப்பகுதியினுள் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) செயலாளர், (2) ஆம் உட்பிரிவின்கீழான மேன்முறையீட்டைப் பெற்றதிலிருந்து அறுபது நாட்களினுள் அக்கருமம் பற்றி முடிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் மேன்முறையீடு செய்யும் திறத்தவருக்கும் தமது முடிபை அறிவித்தலும் வேண்டும். ஒரு மேன்முறையீட்டின்மீதான செயலாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(4) மேன்முறையீடொன்று தொடர்பிலான செயலாளரின் முடிபை நிறைவேற்றுதல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின் ஏற்புடைமை.

22அ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றிரெண்டாம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகப் பணிப்பாளர், கரையோர வலயத்தினுள் அடங்குகின்ற வோர் இடப்பரப்புத் தொடர்பாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதியின் முற்சம்மதத்தைப் பெறாமல் அதனை அவ்வாறு வழங்குதலாகாது.

(2) புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகப் பணிப்பாளரினால் அனுமதிப்பத்திரமொன்று அளிக்கப்படுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி சம்மதிக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, சூழ்நிலைகளில் அவர் அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகள், அவ்வாறு அளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

(3) புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகப் பணிப்பளரினால் அனுமதிப்பத்திரமொன்று எவ்வாளுக்கு அளிக்கப்படுகின்றதோ அவ்வாள் ஒருவர், அவரது அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அதுபற்றிப் புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) அத்தயை அறிவிப்பைப் பெற்றதன்மேல், புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகப் பணிப்பாளர், தலைமையதிபதி அனுமதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு, பணிப்பொன்றிற் குறித்துரைக்கப்படவேண்டிய காலப் பகுதியினுள், அதற்கு உடனடியாக இணங்கி

யொழுகும்படி அவரைத் தேவைப்படுத்துகின்ற அத்தகைய பணிப்பை வழங்குதல் வேண்டும். அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அத்தகைய காலப்பகுதியினுள் அல்லது அத்தகைய காலப்பகுதி எத்தேதிக்கு நீடிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய பிந்திய தேதியினுள் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகப் பணிப் பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர் தலைமை யதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர், அனு மதிப்பத்திரத்தை இல்லாதாக்குதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி அனுமதிப்பத்திரமொன்று இல்லாதாக்கப்படு மிடத்து, 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின் 38 ஆம், 39 ஆம் மற்றும் 40 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய இல்லாதாக்குகை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் IIIஅ, IIIஆ, IIIஇ, IIIஈ என்னும் புதிய பாகங்களை உட்புகுத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் III ஆம் பாகத்தை உடனடுத் துப் பின்வரும் புதிய பாகங்கள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் IIIஅ, IIIஆ, IIIஇ மற்றும் IIIஈ என்னும் பாகங்களாகப் (பிரிவுகள் 22ஆ, 22இ, 22ஈ, 22உ, 22ஊ மற்றும் 22எ) பயனுறுதலும் வேண்டும் :-

"பாகம் III அ

**பாதிக்கப்பட்ட இடப்பரப்புகள்**

பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளை வெளிப் படுத்துதல்.

22ஆ. (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளி யிடப்பட்ட கட்டளை மூலம்,-

(அ) கரையோர வலயத்திற்குள்ளான அல்லது கரையோர வலயத்திற்கருகாமையிலுள்ள அல்லது அத்தகைய இரு இடப்பரப்புக ளினுள்ளும் அடங்குகின்றதான ; அல் லது

(ஆ) ஏதேனும் நீர்நிலையிற்குள்ளான அல்லது ஏதேனும் நீர்நிலையின் பாகத்திற்குள்ளான; அல்லது

(இ) ஏதேனும் ஏரியிற்குள்ளான அல்லது ஏதேனும் ஏரியின் பாகத்திற்குள்ளான அல்லது ஓர் ஏரியின் புற எல்லை இடப்பரப்பிற்குள்ளான,

ஏதேனும் இடப்பரப்பை ''பாதிக்கப்பட்ட இடப்பரப்பு'' ஒன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) பதினான்காம் பிரிவின் கீழ் பெறப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் நியதிகளின் படி கொண்டுநடாத்தப்படக்கூடிய ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடு, உட்பிரிவு (1) இன் (அ) என்னும் பந்தியின்கீழ் பாதிக்கப்பட்டவோர் இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்றில் அது கொண்டுநடாத்தப்படின், தடைசெய்யப்பட்டவொரு செயற்பாடாகக் கருதப்படும். தடைசெய்யப்பட்ட செயற்பாடொன்றில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் பாதிக்கப்பட்ட இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பை, ஆளெவரும், நிரப்புதலாகாது, அதில் நிறுவுதலாகாது, நிர்மாணித்தலாகாது, முட்டுக்கட்டையிடுதலாகாது, அதைத் தீழ்ப்பாக்குதலாகாது அல்லது அதில் ஏதேனும் கழிவுப்பொருளை உட்செலுத்துலாகாது அல்லது அத்தகைய இடப்பரப்பிலுள்ள நீர்வாழுயிரினங்களுக்கு அல்லது கடல்வாழினங்களுக்குத் தீங்குவிளைவிக்கும் ஏதேனும் செயலைச் செய்தலாகாது. அத்தகைய இடப்பரப்பை நிரப்புகின்ற, அதில் நிறுவுகின்ற, நிர்மாணிக்கின்ற, முட்டுக்கட்டையிடுகின்ற, அதைத் தீழ்ப்பாக்குகின்ற, அதில் ஏதேனும் கழிவுப்பொருளை உட்செலுத்துகின்ற அல்லது அதிலுள்ள நீர்வாழுயிரினங்

களுக்கு அல்லது நீர்வாழினங்களுக்குத் தீங்கு விளைவிக்கின்ற ஏதேனும் செயலைச் செய்கின்ற ஆளெவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) பிரிவு 27அ மற்றும் பிரிவு 28 என்பவற்றின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், (2) ஆம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறும்வகையில் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பிணக்கிற்குட்பட்ட செயல், பாதிக்கப்பட்ட இடப்பரப்புக்குவெளியேயுள்ள ஓர் இடப்பரப்பில் புரியப்பட்டதென்பதை எண்பிப்பதற்கான பொறுப்பு, அதில் ஈடுபடுகின்ற ஆளின் மீதான தாதல் வேண்டும்.

(6) இவ்விடப்பரப்புக்கள் எம்முறையில் நிருவகிக்கப்படவேண்டுமோ அம்முறையையும் அத்தகைய இடப்பரப்பிற்கு தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளையும் எடுத்துக்கூறுகின்ற ஒழுங்கு விதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

## பாகம் III ஆ

### கடற்கரைப் பூங்காக்களும் பேணல் இடப்பரப்புக்களும்

கடற்கரைப் பூங்காக்கள்.

22இ. (1) கரையோர வலயத்தினுள்ளான ஏதேனும் இடப்பரப்பை ''கடற்கரைப் பூங்கா'' ஒன்றாக வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வெளிப்படுத்துவது கரையோர வலயத்தினுள்ளான ஏதேனும் இடப்பரப்பின் இயற்கை அழகையும் உயிரினப் பல்வகைமையையும் பேணிக்காப்பதற்கு அவசியமானதென அமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அவ்வாறு வெளிப்படுத்தலாம்.

*(2) அத்தகைய பூங்காக்கள் எம்முறையில் நிருவகிக்கப்படவேண்டுமோ அம்முறையையும், அத்தகைய இடப்பரப்பினுள் நிறைவேற்றப்பட முடியுமான செயற்பாடுகளையும், அத்தகைய இடப்பரப்பினுள் அனுமதிக்கப்படுகின்ற ஆட்களை யும் எடுத்துக்கூறுகின்ற ஒழுங்குவிதிகளை அமைச் சர் ஆக்கலாம்.*

பேணல் இடப்பரப்புக்கள்.

*22ஈ. (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளி யிடப்படும் கட்டளைமூலம், கரையோர மற்றும் நீர்வாழுயிரினச் சூழல் முறைமையைப் பாதுகாப்ப தற்காக எவ்விடப்பரப்பில் விசேட வழிமுறைகள் எடுக்கப்படுவது தேவையாகவுள்ளதோ அவ்விடப் பரப்பு எதனையும் "பேணல் இடப்பரப்பு" ஒன்றாக வெளிப்படுத்தலாம்.*

*(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் அபிவிருத்திச் செயற்பாடு எதுவும் அல்லது நீர்வாழுயிரின மூலவளங்களைச் சேகரித்தலும் சேர்த்தலும் நிறைவேற்றப்படுதலா காது. எவ்வாறாயினும், பணிப்பாளர் தலைமை யதிபதி, அத்தகைய இடப்பரப்பினுள் அறிவியல் சார் கற்கையிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுவதற்கு உட்கருதுகின்ற ஆட்களுக்கு, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் அனுமதிப்பத்திரங்களை வழங்கலாம்.*

*(3) அத்தகைய இடப்பரப்புக்களை நிருவகிக்கும் முறையையும் விதத்தையும், அத்தகைய இடப்பரப்பு களினுள் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகளையும், அத்தகைய இடப்பரப்புக்களினுள் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய ஆட்களையும் விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.*

## பாகம் III இ

### விசேட முகாமை இடப்பரப்புக்கள்

விசேட முகாமை இடப்பரப்புக்கள்.

22உ. (1) அமைச்சர், கரையோர வலயத்தினுள்ளான அல்லது கரையோர வலயத்துக்கு அருகாமையிலுள்ள அல்லது கரையோர வலயத்திலிருந்தும் அருகாமையிலுள்ள காணி இடப்பரப்பிலிருந்துமான இரு இடப்பரப்புக்களையும் கொண்டுள்ள ஏதேனும் காணி இடப்பரப்புத் தொடர்பில், வரைவிலக்கணப்படுத்தப்பட்ட புவியியற்சார் இடப்பரப்பினுள் மூலவள முகாமையைத் திட்டமிடுவதற்கு ஒத்திசைவானவோர் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டிய தேவை காரணமாக அத்தகைய இடப்பரப்பை "விசேட முகாமை இடப்பரப்பு" ஒன்றாக வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வெளிப்படுத்துவது அவசியமாகவுள்ளதென அவருக்குத்தோன்றினால், அவ்வாறு வெளிப்படுத்தலாம் :

ஆயின், அத்தகைய இடப்பரப்பெதுவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தயாரிக்கப்பட்ட கரையோர வலய மற்றும் கரையோர மூலவள முகாமைச் செய்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தாலொழிய, இடப்பரப்பெதுவும், விசேட முகாமை இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப் படுதலாகாது.

(2) அமைச்சர், அத்தகைய விசேட முகாமை இடப்பரப்பு எம்முறையிலும் எவ்விதத்திலும் எவ்வாட்களினாலும் நிருவகிக்கப்படவேண்டுமோ அம்முறையையும் அவ்விதத்தையும் அவ்வாட்களையும், இவ்விடப்பரப்புக்களை அணுகுவதற்கு உரித்துடைய ஆட்களையும் மற்றும் அத்தகைய இடப்பரப்புக்களினுள் நிறைவேற்றப்படமுடியுமான செயற்பாடுகளையும் விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

## பாகம் III ஈ

### கரையோர அணுகுகைச் செய்திட்டம்

கரையோர அணுகுகைச் செய்திட்டம்.

22ஊ. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் இயன்றளவு விரைவாக, கரையோர வலயத்துக்கான அணுகுகையை வழங்குகின்றவையும், கடற்கரைக்கும், மார்க்கங்களுக்கும், பாறைகளுக்கும், இணைபாதைகளுக்கும் பொதுமக்களுக்கு அணுகுகை வழங்குகின்றவையுமான எல்லா மார்க்கங்களையும், பாதைகளையும், இணைப்பாதைகளையும் அடையாளங்காணக்கூடிய அளவையொன்றை நிறைவேற்றச் செய்தல் வேண்டும். அளவையின் முடிவெடுப்புகளின் அடிப்படையின்மீது, அவர் அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதனை பேரவையிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வறிக்கையைத் தொகுப்பதற்காக ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திடமிருந்து, நிறுவனத்திடமிருந்து அல்லது தொடர்புபட்ட செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள முகவராண்மையிடமிருந்து அவரினால் நியாயமான முறையில் தேவைப்படுத்தப்பட்ட தகவலைக் கோருவதற்கும் பெறுவதற்கும் இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றார். இயைபான தகவலைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் அத்தகைய திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும், முகவராண்மைகளினதும் கடமையாதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, பேரவையினால் ஆலோசிக்கப்பட்ட அத்தகைய திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றை உள்ளடக்கிய பின்னர் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கரையோர அணுகுகைச் செய்திட்டம் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள்,

பொதுமக்களின் கருத்துரைகளுக்காக அச்செய்திட்டத்தை அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும். பொதுமக்களுக்கு எவரேனும் உறுப்பினர் கரையோர அணுகுகை செய்திட்டம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள், தமது கருத்துரைகளைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட எவையேனும் கருத்துரைகளை அச்செய்திட்டத்தில் உள்ளடக்குதலும், மீளாயப்பட்டவொரு செய்திட்டத்தை அமைச்சரிடம் சமர்ப்பித்தலும் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(4) அமைச்சர், அதன்மேல், மீளாய்வுசெய்யப்பட்ட கரையோர அணுகுகைச் செய்திட்டத்தை அங்கீகாரத்துக்காக அமைச்சரவையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சரவையினால் சொல்லப்பட்ட செய்திட்டம் அங்கீகரிக்கப்படுவதன் மேல், அமைச்சர் கரையோர அணுகுகைச் செய்திட்டத்தை வர்த்தமானியில் வெளியிடச் செய்தல் வேண்டும். கரையோர அணுகுகைச் செய்திட்டம், வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியிலிருந்து அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) கரையோர அணுகுகைச் செய்திட்டத்தில் உள்ளடக்குவதற்குத் தேவையாகவுள்ள கருமங்களையும், அத்தகைய செய்திட்டத்துக்கு இசைந்தொழுக நிறைவேற்றப்படக்கூடிய செயற்பாடுகளையும், பரப்பளவுகளும் அமைவிடங்களும் உட்பட, அச்செய்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட காணிகளின் சொத்தாண்மை பற்றிய விபரங்களையும் குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான

சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*சட்டத்தின் ஏற்பாடுகள், பாகங்கள் IIIஅ, IIIஆ, IIIஇ மற்றும் IIIஈ என்பவற்றுக்கு ஏற்புடையன வாதல்.*

22எ. சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள், இச்சட்டத்தின் (இதன்கண் உட்புகுத்தப்பட்டவாறான) பாகங்கள் IIIஅ, IIIஆ, IIIஇ மற்றும் IIIஈ என்பவற்றின் செயற்பாட்டுக்கு இயைபாகவுள்ளவிடத்து, ஏற்றமாற்றங்களுடன், சட்டத்தின் (இதன்கண் உட்புகுத்தப்பட்டவாறான) பாகங்கள் IIIஅ, IIIஆ, IIIஇ மற்றும் IIIஈ என்பன தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அல்லது கடற்படுக்கையில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது கடற்படுக்கையில் அறிவியல் சார் கற்கையையும் ஆராய்ச்சியையும் மேம்படுத்தும் நோக்கத்துக்காக," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அல்லது கரையோர வலயத்தின் உறுதிப்பாடு," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது கரையோர வலயத்தின் உறுதிப்பாடு அல்லது கரையோர வலயத்தினுள் உள்ள மூல வளங்கள்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1அ) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுமிடத்து, அவ்வாறு

அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட ஆள், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் சொல்லப்பட்ட அறிவித்தலுக்கிணங்கியொழுகுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதி கழிந்தபின்னர், அத்தகைய அத்துமீறலை அல்லது செயற்பாட்டைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறை களை எடுத்தல் வேண்டும். அத்துமீறலை அல்லது செயற்பாட்டைத் தடுப்பதில் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும், அரசுக்கு வருமதியான கடன் என்றாற்போன்று, எவ்வாளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாளிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.'' ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''ஓர் உள்ளூர் அதிகாரசபை'' என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரி வின் முடிவுவரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, ''ஓர் உள்ளூரதிகாரசபை அல்லது ஒரு முகவராண்மை அத்தகையவொரு வேண்டுகோளுக்கு இணங்கியொழுக இயலாதிருக்குமாயின், அத்தகைய இயலாமை பற்றி அது உடனடியாகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதன்மேல், பணிப்பாளர் தலைமை யதிபதி, எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய கழிவுப்பொருளுக்கு, உகப்பிலாப் பொருளுக்கு அல்லது அத்தகைய செயற்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளை, செவ்வையாக்கல் வழிமுறைகளை எடுக்கும்படி அல்லது அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படி தேவைப்படுத்துதல் வேண்டும்;.'' அத் துடன்

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

''(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, எந்த ஆளுக்கு அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த ஆள், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அறிவித்தலுக்கு இணங்கியொழு

குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். நியாயமானவொரு காலப்பகுதி முடிவுற்ற பின்னர், அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்கான நடபடிகள் எவையும் எடுக்கப்படாதுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய அத்துமீறலை அல்லது செயற்பாட்டைத் தடுப்பதற்கு அவசியமாக்கக்கூடிய வாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். அத்துமீறலை அல்லது செயற்பாட்டைத் தடுப்பதில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும், அரசுக்கு வருமதி யான கடன் என்றாற்போன்று, அறிவித்தல் சேர்ப்பிக் கப்பட்ட ஆளிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, ''இச்சட்டத் தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன் அல்லது 1992ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எந்த உரிமம் தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழான நிபந்தனைகளை விதித்துள்ளாரோ அந்த ஏதேனும் உரிமத் துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 26அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்ப துடன், அது, அச்சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

''செயற் பாட்டைத் தணிப்பதற்கான பணிப்புக்களை வழங்குதல்.

26அ. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, கரையோர வலயத்துக்கு அல்லது அதன் கண்ணுள்ள மூலவளங்களுக்குச் சேதத்தை அல்லது கெடுதலை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்கும் சாத்தியங்கொண்ட ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடும் சாத்தியங்கொண்ட எவரேனு மாளுக்கு, அத்தகைய சேதத்தை அல்லது கெடுதலைத் தடுப்பதற்கென அல்லது தணிப்ப தற்கென எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள்

தொடர்பான பணிப்புக்களை வழங்குவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

(2) எவரேனுமாள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, நீதிவானானவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப் பட்ட விண்ணப்பத்தின்மேல், அவ்வாள் பணிப்பு களுக்கு இணங்கியொழுகும்வரை, கருத்திட்டத்தின் அல்லது செயற்பாட்டின் தற்காலிக இடை நிறுத்தத்துக்கான கட்டளையையிடலாம்.

(3) நீதிவானின் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனுமாள், அவர் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகத்தவறும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும் பத்தாயிரம் ரூபாவான குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டுமென்பது டன், அத்துடன் சேர்த்து மேலதிகமாக நீதிமன்ற அவமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க அவருக் கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண் டும்.''.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத் துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அறிவித்தலிற் சுட்டிக்காட்டப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனுமாள், அது தொடர்பிலான நினைவூட்டலொன்று அவருக்கு

அனுப்பப்பட்டபின்னரும் அவ்வறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறினால், அவருக்கு அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இல்லாதாக்கப்படுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(1) பதினான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் -

(அ) முதலாவது தவறொன்றின் விடயத்தில், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான தவறொன்றின் விடயத்தில், ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஓராண்டுக்குக் குறையாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "இருபத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "இருபத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அத்துடன் அல்லது 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**28**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பினால் இன்னலுறும் எவரேனுமாள், அறிவித்தல் ஒட்டப்பட்டதிலிருந்து மூன்று நாட்களினுள், கரையோரம் பேணல் என்ற விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(3அ) மூன்றாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்றைப் பெற்றதன்மேல், செயலாளர், இயைபான

எல்லா ஆவணங்களையும் கோப்புக்களையும் உடனடியாகத் தமக்கு அனுப்பும்படி பணிப்பாளர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகையவொரு வேண்டுகோள் விடுக்கப்பட்டதிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் இயைபான எல்லா ஆவணங்களையும் கோப்புக்களையும் எவையேனுமிருப்பின் செயலாளருக்கு அனுப்புதல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். செயலாளர், முடிபொன்றைச் செய்வதற்கு அத்தியாவசியமாகவுள்ளதென அவர் அபிப்பிராயப்படுமிடத்து, நேரில் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை மேன்முறையீட்டாளருக்கு அளித்தல் வேண்டும்.

(3ஆ) செயலாளர், மேன்முறையீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தைந்து (45) நாட்களினுள், அத்தகைய மேன்முறையீடு பற்றித் தமது முடிபைச் செய்தல் வேண்டுமென்பதுடன், அவரது முடிபை பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் மேன்முறையீட்டாளருக்கும் அறிவித்தலும் வேண்டும். அத்தகைய முடிபுக்குப் பயன்கொடுத்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(3இ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எவ்வாளுக்குக் கட்டளையொன்று சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரும், அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அக்கட்டளைக்கெதிராக எவ்வாள் மேன்முறையீடு செய்துள்ளாரோ அவ்வாள் எவரும் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தைத் தொடர்ந்து நிறுவுதலோ அல்லது நிர்மாணித்தலோ ஆகாது அல்லது அத்தகைய ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பு, வீடு, குடிசை, கொட்டில் அல்லது வேறு கட்டிடம் அத்தகைய இடத்தில் தொடர்ந்திருப்பதனை அனுமதித்தலாகாது.

(3ஈ) உட்பிரிவு (3இ)இன் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட

தன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஓராண்டுக்குக் குறையாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒன்றில், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி இடித்தழித்தல் கட்டளை யொன்று சேர்ப்பிக்கப்பட்டதன்மீது அல்லது (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் மேன்முறையீடு முடிவுற்றதன்மீது, அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பின், வீட்டின், குடிசையின், கொட்டிலின் அல்லது வேறு கட்டிடத்தின் நிர்மாணம் தகர்க்கப்பட்டு காணியிலிருந்து அகற்றப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும். அதிகார மளிக்கப்படாத கட்டமைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தைத் தகர்ப்பதில் உறப்பட்ட மொத்தச் செலவும், அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தை நிர்மாணிப்பதில் பயன்படுத்தப்பட்ட எல்லாப் பொருட்களையும் அகற்றுவதில் உறப்பட்ட செலவும், அரசுக்கு வருமதியான கடன் என்றாற்போன்று அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும் :

ஆயின், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறு வதற்கு முன்னர், குறித்துரைக்கப்படுகின்றவாறான ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பை, வீட்டை குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தைத் தகர்ப்பதற்கும் அகற்றுவதற்கும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நியதிகளின்படி எந்த ஆள் தேவைப்படுத் தப்படுகின்றாரோ அந்த எவரேனுமாள், அத்தகைய அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பினுள், வீட்டினுள், குடிசையினுள், கொட்டிலினுள் அல்லது வேறு கட்டிடத் தினுள் தற்போதுள்ள அவரது உடைமைகள் எல்லாவற்றை யும் அங்கிருந்து அகற்றுவதற்கு அல்லது அகற்றுவிப்ப தற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(4அ) மேற்கூறப்பட்டவாறாக அதிகாரமளிக்கப்படாத ஏதேனும் கட்டமைப்பு, வீடு, குடிசை, கொட்டில் அல்லது வேறு கட்டிடம் தகர்க்கப்பட்டு அகற்றப்பட்டபின்னர் எந்நேரத்திலேனும் அவரது உடைமைகளுள் ஏதேனும் பொருள் காணாமற்போயுள்ளதென எவரேனுமாள் சார்த்துமிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய தகர்த்தலுக்கும் அகற்றுதலுக்கும் உடன்முன்னர் அப்பொருள் தனது உடமையில் இருந்ததென நியாயமான ஐயத்துக்கிடமின்றி எண்பிப்பதற்கான பொறுப்பு அத்தகைய ஆளின் மீதாதல் வேண்டும்.

(4ஆ) இப்பிரிவின் நியதிகளின்படியான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், தகர்க்கப்பட்டு அகற்றப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பு, வீடு, குடிசை, கொட்டில் அல்லது வேறு கட்டிடம் ஒன்று உள்ளமை பற்றிய கேள்வி எழுகின்றவிடத்தெல்லாம், பணிப்பாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதுபற்றிய முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31ஆஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 31ஆஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"கடல் முருகைக்கல்.

31ஆஆ. (1) பிரிவுகள் 31அ மற்றும் 31ஆ என்பவற்றின் ஏற்பாடுகள், கரையோர வலயத்தினுள் அல்லது அதற்கு வெளியே கடல் முருகைக்கல் தோண்டுதல், சேகரித்தல், உடைமை கொள்ளுதல், பதப்படுத்துதல், களஞ்சியப் படுத்துதல், எரித்தல் மற்றும் இடம்பெயர்த்தல் என்பன தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) தோண்டப்பட்ட, சேகரிக்கப்பட்ட, உடைமை கொள்ளப்பட்ட, பதப்படுத்தப்பட்ட, களஞ்சியப் படுத்தப்பட்ட, எரிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்க் கப்பட்ட பொருள், கடல் முருகைக்கல்லா என்பதுபற்றிய கேள்வி ஏதேனும் குற்றவழக்கில் எழுந்தால், அப்பொழுது, அப்பொருள்படப்

பணிப்பாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31உ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31உ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*''மணலை அல்லது கடற்சிப்பிகளை இடம் பெயர்த்தலும் களஞ்சியப் படுத்துதலும்.*

31உ. (1) எவரேனும் பொலிசு அலுவலர்-

(அ) மணலை அல்லது கடற்சிப்பிகளை இடம்பெயர்க்கின்ற அல்லது இடம் பெயர்க்கின்றதாகச் சந்தேகிக்கப்படுகின்ற ஏதேனும் வாகனத்தை, கலத்தை, படகை அல்லது மரக்கலத்தை நிறுத்திப் பரிசோதனை செய்வதற்கும் ;

(ஆ) மணல் அல்லது கடற்சிப்பிகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்து அவற்றைச் சோதனையிடுவதற்கும் ;

தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய மணல் அல்லது கடற்சிப்பிகள் சட்டமுறையாகப் பெறப்பட்டனவென எண்பிப்பதற்கான பொறுப்பு, அத்தகைய மணலை அல்லது கடற்சிப்பிகளை, விடயத்துக்கேற்ப, இடம்பெயர்க்கின்ற அல்லது களஞ்சியப்படுத்துகின்ற ஆளின் மீதாதல் வேண்டும். இடம்பெயர்த்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் சட்டமுறையானதென்பதற்கான எண்பிப்பைக் கொடுத்துதவுவதற்கு இயலாதவராகவுள்ள எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.''.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஊ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "குற்றப் பணங்கள் என்றவகையாகப் பெறப்பட்ட பணங்களில் ஐம்பது சதவீதம் பொலிசுக் கட்டளைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட பொலிசு வெகுமதி நிதியத்திற்கு வரவிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "(இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியம்" என்றழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; இச்சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட எல்லாக் குற்றப்பணங்களும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இழப்பிக்கப்பட்ட பொருட்களைக் கையுதிர்ப்பதன்மூலம் தேறிப்பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும், இதற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப்பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) பணிப்பாளர் தலைமையதிபதி, நிதியத்தின் நிருவாகத்திற்கும் மற்றும் நிதியத்தின் கணக்குகளைப் பேணுவதற்கு பொறுப்பாதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதி, நிதியத்தின் கணக்குகளை வருடாந்தம் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் ஒருப்பாட்டுடன், வெகுமதியொன்றைப் பெறுவதற்குத் தகவுடைய எவரேனுமாளுக்கு அதனைச் செலுத்தலாம். அமைச்சர், காலத்துக்குக்காலம், தகவுடைமைக்கான தகைமைக

ளைத் தீர்மானிப்பதில் உதவிபுரிவதற்குத் திட்டமிட்டப் பட்ட வழிகாட்டுநெறிகளையும் அத்தகைய ஏதேனும் வெகுமதியைச் செலுத்துவதனை ஆளுகின்ற ஏனைய கட்டளைக்கற்களையும் வழங்குதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31எ மற்றும் 31ஏ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஊ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத் தப்படுகின்றன என்பதுடன், அவை, அச்சட்டவாக்கத்தின் 31எ மற்றும் 31ஏ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*அனுமதிப் பத்திரமொன்றில் லாமல் காணியை அல்லது நீர்நிலைகளை நிரப்புதல் தவறொன்றாதல்.*

31எ. (1) ஆளெவரும், கரையோர வலயத்தினுள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றில்லாமல் ஏதேனும் காணியை அல்லது ஏதேனும் நீர் நிலையை நிரப்புதலாகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அறிவித்தல் கொடுப்பதன் மூலம், அத்தகைய அறிவித்தலிற் பணிப்பாளர் தலைமையதிபதி குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், சம்பந்தப்பட்ட காணியை அல்லது நீர்நிலையை நிரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பதார்த்தத்தை அல்லது பொருளை அத்தகைய காணியிலிருந்து அல்லது நீர்நிலையிலிருந்து உடனடியாக அகற்றும்படியும் அத்தகைய நிரப்புகைக்கு முன்னர் அது எந்நிலைமையில் இருந்ததோ அந்நிலைமைக்கு அதனை மீளக் கொண்டு வரும்படியும் அத்தகைய ஆளை அல்லது ஆட்களைப் பணிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்பினால் இன்னலுறு கின்ற எவரேனுமாள், அவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முன்று நாட்களினுள், கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின்

அமைச்சுச் செயலாளருக்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான ஒரு மேன்முறையீட்டைப் பெற்றதன்மேல், செயலாளர், இயைபான எல்லா ஆவணங்களையும் கோப்புக் களையும் தமக்கு அனுப்பும்படி பணிப்பாளர் தலைமையதிபதியை உடனடியாகத் தேவைப் படுத்துதல் வேண்டும். அத்தகையவொரு வேண்டு கோள் செய்யப்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், இயைபான எல்லா ஆவணங்களையும் கோப்புக் களையும் எவையேனுமிருப்பின் செயலாளருக்கு அனுப்புதல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். செயலாளர் முடி பொன்றைச் செய்வதற்கு அத்தியாவசியமாகவுள்ள தென அவர் அபிப்பிராயப்படுமிடத்து, மேன்முறை யீட்டாளருக்கு நேரில் கேட்கப்படுவதற்கான வாய்ப் பொன்றை அளித்தல் வேண்டும்.

(5) செயலாளர், மேன்முறையீடு கிடைக்கப் பெற்றதிலிருந்து முப்பது நாட்களினுள், அத்தகைய மேன்முறையீட்டின்மீது அவரது முடிபைச் செய்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் மேன்முறையீட்டாளருக்கும் அவரது முடிபு பற்றி அறிவித்தலும் வேண்டும். அத்தகைய முடிபுக்குப் பயன்கொடுத்தல் பணிப் பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எவ்வாளுக்குப் பணிப்பொன்று சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அவ் வாள் எவரும் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளைக்கெதிராக எவ்வாள் மேன்முறையீடு செய் துள்ளாரோ அவ்வாள் எவரும், ஏதேனும் காணியை அல்லது நீர்நிலையைத் தொடர்ந்து நிரப்புதலாகாது.

(7) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்குக் குறையாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். அதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி, விடயத்துக்கேற்ப, காணியிலிருந்து அல்லது நீர்நிலையிலிருந்து பதார்த்தத்தை அல்லது பொருளை அகற்றுவித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, காணியை அல்லது நீர்நிலையை நிரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பதார்த்தத்தினதும் பொருளினதும் அகற்றுகைக்கான மொத்தச் செலவு, அரசுக்கு வருமதியான கடன் என்றாற்போன்று அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படுதலும் வேண்டும்.

(8) இப்பிரிவின் நியதிகளின்படியான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், நிரப்பப்பட்டுள்ளதும், நிரப்பப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பதார்த்தம் அல்லது பொருள் அடுத்துப்பின்னர் அதிலிருந்து அகற்றப்பட்டுள்ளதுமான ஒரு காணி அல்லது நீர்நிலை உள்ளமை பற்றிய கேள்வி எழுகின்றவிடத்தெல்லாம், பணிப்பாளர் தலைமையதிபதியின் கையொப்பமிடப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதுபற்றிய முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

(9) எவரேனுமாள் அல்லது ஆட்கள், (2) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறான அல்லது மேன்முறையீட்டை

நிராகரிக்கும்போது செயலாளரினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலத்தினுள் சம்பந்தப்பட்ட காணியை அல்லது நீர்நிலையை நிரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பதார்த்தத்தை அல்லது பொருளை அகற்றுவதற்கும் அத்தகைய நிரப்புகைக்கு முன்னர் இருந்த நிலைமைக்கு அக்காணியை அல்லது நீர்நிலையை மீளக்கொண்டுவருவதற்கும் தவறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியானவர், விடயத்திற்கேற்ப, அக்காணியிலிருந்து அல்லது நீர்நிலையிலிருந்து அப்பதார்த்தத்தை அல்லது பொருளை அகற்றுவித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, அக்காணியிணை அல்லது நீர்நிலையை நிரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பதார்த்தத்தை அல்லது பொருளை அகற்றுவதற்கான மொத்தச் செலவு, அரசுக்கு வருமதியான கடன் ஒன்று என்றாற்போன்று அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படுதலும் வேண்டும்.

பிணை அனுமதிக்கப் படுதலாகாது.

31ஏ. இச்சட்டத்தின் கீழான தவறொன்று தொடர்பிலான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்திருக்கும்போது நீதிவானொருவரினால் பிணையெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 154எ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாணத்தின் மேல் நீதிமன்றம், நீதிமன்றத்தின் திருப்திக்கு காண்பிக்கப்பட்ட விதிவிலக்கான சூழ்நிலைகளுக்காக, குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கான பிணையை அனுமதிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது :-

"(1) எவரேனும் பொலிசு அலுவலர், நீதிவானொருவரிடமிருந்தான கட்டளையின்றியும், பிடியாணையொன்றைப் பெறாமலும், ஆறுமாதங்களை விஞ்சுகின்ற

வொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதும், இச்சட்டத்தின் கீழானதுமான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளவரென அல்லது தொடர்புபட்டுள்ளவரென நியாயமான முறையில் சந்தேகிக்கப்படும் எவரேனுமாளைக் கைதுசெய்யலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 35அஅ மற்றும் 35அஅஅ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 35அஅ மற்றும் 35அஅஅ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"சட்டத்தின் கீழான தவறுகள், பிடியாணையின்றிக் கைது செய்யக்கூடிய தவறுகளாதல்.*

35அஅ. இச்சட்டத்தின் கீழான ஒவ்வொரு தவறும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்யக் கூடிய தவறொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*துடர்ச்சியிலிருந்தான பாதிப்பின்மை.*

35அஅஅ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செயலாற்றுகின்ற பொலிசு அலுவலரொருவருக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் பின்பற்றி அத்தகைய பொலிசு அலுவலரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் சட்டமுறையான செயலுக்காக, குடியியல் அல்லது குற்றவியல் வழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**35.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**36**. முதன்மைச் சட்டவாக்கத்தின் *42* ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) ''கரையோரம் பேணல்'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-

'' ''கரையோர அணுகுவழி'' என்பது பௌதீக, கட்புல நோக்கில் ஒரு கரையோர விளிம்பை அணுகுவதற்கு, அதனுட்பிரவேசிப்பதற்கு அல்லது அதனுட்பிரவேசிப்பதற்கான அணுகுமுறையைப் பயன்படுத்துவதற்கு அல்லது அதன்வழியாகச் செல்வதற்குப் பொதுமக்களுக்குள்ள உரிமை என்று பொருளாகுமென்பதுடன், வழமையாக நீரின் முனைக்குச் சமாந்தரமாகவுள்ள காணித் துண்டு அல்லது கடற்கரைக்கோட்டுக்குச் சமாந்தரமாக அல்லது அதன்வழியாகச் செல்லுகின்ற பாதை அல்லது செல்தடம், மிக்க அண்மையிலுள்ள பொது வீதி வழியை நியாயமான நேரடி மார்க்கத்தின் வழியாகக் கடற்கரைக்கோட்டுச் சேரிடமொன்றுடன் தொடுக்கின்ற பாதை அல்லது செல்தடம் அல்லது பொது வீதியொன்றிலிருந்து சராசரி உயர்ந்த நீர் எழுச்சித்தள மட்டத்துக்குக் கடற்கரைக்கோட்டுக்கான அணுகுவழி என்பனவான கடற்கரைக்கோடு வழியான அணுகுவழியையும் உள்ளடக்கும் ;

''கரையோர மூலவளங்கள்'' என்பது, கரையோர வலயத்தினுள் காணப்படும் எல்லா உயிருள்ள மற்றும் உயிரற்ற மூலவளங்களையும் உள்ளடக்கும் ;

''முகாமை'' என்பது, ஒன்றில் தனிவேறாக அல்லது ஒன்றிணைந்தவொரு முறையில், புதுப்பிக்கப்படற்பாலனவான அத்துடன் புதுப்பிக்கப்பட முடியாதனவான கரையோர மூலவளங்களை முகாமை செய்தல் என்று பொருளாகும், ஆனால் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினுள் அடங்குகின்ற கடற்றொழில், நீர்வாழ் உயிரின மூலவளங்களை உள்ளடக்காது ;'';

(2) ''கரையோர வலயம்'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், ''உள்ளடக்குதலும் வேண்டும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''உள்ளடக்குதலும் வேண்டும் ; அத்துடன் பூச்சிய சராசரிக் கடல் மட்டத்திலிருந்து புறப்பரப்பு வழியாக நிலப்பகுதியை நோக்கி நூறு மீற்றர்களைக் கொண்ட மேலதிகமாக நீடிக்கப்பட்ட எல்லையினுள் அடங்கும் இடப்பரப்பையும் உள்ளடக்குதலும் வேண்டும் ;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) ''கரைமுனங்கு'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

'' ''தொடக்கச் சூழற் பரிசோதனை அறிக்கை'' என்பது, தாக்குகைகள் குறிப்பிடத்தக்கனவா, ஆதலால் சூழல் தாக்குகை மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்படுவதனைத் தேவைப்படுத்துகின்றனவா என்பதைத் தீர்மானிக்கும் நோக்குடன், அபிவிருத்திச் செயற்பாடுகளின் மூலம் சூழலின் மீது ஏற்படக்கூடிய தாக்குகைகள் அதில் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய எழுத்திலானவோர் அறிக்கை என்று பொருளாகும். அத்தகைய அறிக்கை, அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு இயைபான எல்லா விபரங்களையும், விவரணங்களையும், தரவுப் படங்களையும், வடிவமைப்புக்களையும் மற்றும் ஏனைய தகவலையும் கொண்டிருத்தல் வேண்டும் ;'';

(4) ''நேர்த்தளக் கோடு'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

'' ''நிலைபேறாந் தன்மை'' என்பது, குறுகிய கால இலாபத்துக்காக மிதமிஞ்சிய பயன்நுகர்வினால் ஏற்படுத்தப்பட்ட மூலவளக் குறைப்புக்கான மாற்றுவழியாகுமென்பதுடன், தனிப்பட்ட இனங்களும் கூட்டினங்களும் எந்த வாழிடங்களின் மீதும் சூழல் முறைமைகளின்மீதும் தங்கியுள்ள

னவோ அவ்வாழிடங்களுடனும் சூழல் முறைமைகளுடனும் சேர்த்து, ஆட்களுக்கான அவற்றின் தற்போதைய அல்லது நுகர்தகு பயன்பாடு தடைசெய்யப்படாத வகையில் அவற்றின் புத்திசாலித்தனமான பயன்பாட்டுக்கும் கவனமான முகாமைக்குமான தேவையை உட்கிடையாகவும் கூறுகின்றது ;"; அத்துடன்

(5) "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "நீர்நிலை" என்பது, ஆறுகளையும், கடலுடன் அவ்வாறு தொடுக்கப்பட்ட வேறேதேனும் நீர்நிலையையும், சதுப்பு நிலங்களையும், சேற்று நிலங்களையும், ஏரிகளையும் மற்றும் சகதிநிலச் சேற்று நிலங்களையும் உள்ளடக்கும்.".

இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்துக்கும் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்துக்குமான திருத்தங்கள்.

**37**. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டமும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டமும், இச்சட்டத்துக்கான அட்டவணையின் I ஆம் நிரையில் தரப்பட்டுள்ள பிரிவுகளில், சொல்லப்பட்ட அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள அளவுக்கும் முறையிலும் இத்தாற்றிருத்தப் படுகின்றன :-

**அட்டவணை** (பிரிவு 38)

| **1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்துக்கான திருத்தங்கள்** | |
|---|---|
| நிரல் I<br>*பிரிவு* | நிரல் II<br>*திருத்தத்தின் அளவு* |
| *பிரிவு 2* | *அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-*<br><br>*"(5) இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், கரையோர வலயத்தினுள்ளான ஏதேனும் இடப் பரப்பை, கரையோரம் பேணல் மற்றும் மூலவள முகாமை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாடின்றி, "மீட்டல், அபிவிருத்தி இடப்பரப்பு" ஒன்றாக வெளிப்படுத்துவதற்கான தத்துவத்தை அமைச்சருக்கு அளிப்பதாகக் கருதப் படுதலாகாது:*<br><br>*இவ்வுட்பிரிவில் "கரையோர வலயம்" என்பது, 1981ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".* |
| *பிரிவு 9* | *அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆஆ) என்பதை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-*<br><br>*"(ஆஆ) அத்தகைய இடப்பரப்புக்களில் துறைமுகங்க ளையும் நங்கூரம் இடும் இடங்களையும் நிர்மா ணித்தல், அத் துடன் நீர்ப்பாசனத் துறையிலான பணியைப் பொறுப்பேற்றல் ;".* |

| **1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்துக்கான திருத்தங்கள்** | |
|---|---|
| *நிரல்* I<br>*பிரிவு* | *நிரல்* II<br>*திருத்தத்தின் அளவு* |
| *பிரிவு 20* | *அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும் :-*<br><br>*“ஆயின், எவ்வாறாயினும், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் அல்லது 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைப் பணிப்பாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் தவிரவும் மற்றும் அதன் அல்லது அவரின் ஒருப்பாட்டைப் பெற்றதன்பின்னர் தவிரவும், துணைவிதி, ஒழுங்குவிதி, கட்டளை அல்லது அறிவிப்பு எதுவும், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆக்கப்படுதலோ அல்லது வழங்கப்படுதலோ ஆகாது என்பதுடன், மேற் கூறப்பட்ட சட்டத்தின்கீழான தத்துவம் அல்லது பணியெதுவும் சபையினால் பிரயோகிக்கப்படுதலோ அல்லது நிறைவேற்றப்படுதலோ ஆகாது.”.* |
| *பிரிவு 20அ* | *அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாச கத்தை இடுவதன் மூலமும் :-*<br><br>*“ஆயின், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழான அல்லது 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டத்தின் கீழான தத்துவம், கடமை அல்லது பணி எதுவும், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் அல்லது 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் தவிரவும் மற்றும் அதன் அல்லது அவரின் ஒருப்பாட்டைப் பெற்றதன் பின்னர் தவிரவும், மேற்கூறப்பட்ட சட்டங்களின் கீழ் சபையினால் பிரயோகிக்கப்படுதலோ அல்லது நிறைவேற்றப்படுதலோ ஆகாது.”.* |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க, கரையோரம் பேணல் சட்டத்துக்கான விரிவுப் பெயரைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான விரிவுப்பெயரானது, முதன்மைச் சட்ட வாக்கத்தின் நோக்கெல்லைக்குள் கொண்டுவரப்படுகின்ற கரையோர மூலவள முகாமையின் புதிய பரப்பெல்லையையும் சுட்டிக்காட்டுகின்றது.

**வாசகம் 3**: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்குப் பொதுவான திருத்தமொன்றைச் செய்கின்றது ; இதன்மூலம், அதன்கண் காணப்படும் "கரையோரம் பேணற் சட்டம்", "கரையோரம் பேணல் பணிப்பாளர்", "பணிப்பாளர்", மற்றும் "கரையோரம் பேணல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை", "கரையோரம் பேணல் பணிப்பாளர் தலைமையதிபதி", "பணிப்பாளர் தலைமையதிபதி" மற்றும் "கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை" என்னும் சொற்கள் இடப்படுகின்றன.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோரை நியமிப்பதற்கும் ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, பின்வருவனவற்றை உள்ளடக்குவதற்குக் கரையோரம் பேணல் திணைக்களத்தினது தத்துவங்களின் நோக்கெல்லையையும் பரந்ததாக்குகின்றது :-

(அ) கரையோர வலயத்தினுள், ஏனைய முகவர் நிலையங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் ;

(ஆ) கரையோர வலய முகாமைச் செய்திட்டங்களைத் தயாரித்தலும் செயற்படுத்தலும் ;

(இ) கரையோரம் பேணல் பற்றிய தகவலைப் பரப்புதல் ;

(ஈ) ஆராய்ச்சியை நடாத்துதலும் கரையோரம் பேணல் முகாமை நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதலும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவு, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தத்துவங்களின் கூடுதலான பரந்த கையளித்தலுக்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவு, மதியுரைப் பேரவையை அமைக்கின்ற உறுப்பாண்மையிலான மாற்றமொன்றிற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவு, கரையோர வலயத்தினுள்ளான எல்லா மூலவளங்களினதும் மற்றும் எல்லாச் செயற்பாடுகளினதும் ஆய்வொன்றை நடாத்துவதற்கும், அத்துடன் அதனை உட்படுத்துகின்ற அறிக்கையொன்றை வெளியிடுவதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்துகின்றது.

**வாசகம் 9** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மூன்றாண்டு களினுள் கரையோர வலயத்தையும் மற்றும் கரையோர மூலவள முகாமைச் செய்திட்டத்தையும் தயாரிப்பதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்துகின்றது ; அத்துடன் செய்திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய கருமங்களையும் தருகின்றது.

**வாசககம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், இச்சட்டத்தின் 2 ஆம் வாசகத்தினாலும் 3 ஆம் வாசகத்தினாலும் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதானவொரு திருத்தமுமாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், இச்சட்டத்தின் 2 ஆம் வாசகத்தினாலும் 3 ஆம் வாசகத்தினாலும் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாவொரு திருத்தமுமாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, ஓர் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பங்களைச் செய்வதற்காகக் கூடுதல் விபரமான நடவடிக்கைமுறையை யும் தருகின்றது.

**வாசகம் 13** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், இச்சட்டத்தின் 2 ஆம் வாசகத்தினாலும் 3 ஆம் வாசகத்தினாலும் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதானவொரு திருத்தமுமாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான அங்கீகாரத் துடன் அனுமதிப்பத்திரங்களைக் கைமாற்றுவதற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 15** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன்,-

(அ) இச்சட்டத்தின் 2 ஆம் வாசகத்தினாலும் 3 ஆம் வாசகத்தினாலும் முதன்மைச் சட்டவாக் கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதானவொரு திருத்தமாகும்; அத்துடன்

(ஆ) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் சேர்ப்பிக்கப்படுவதற்கான தேவைப்பாட்டுக்குப் பதிலாக, அறிவித்தலானது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமென ஏற்பாடுசெய்வதுமாகும்.

**வாசகம் 16** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தல் பதிவுத்தபால்மூலம், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அனுப்பப்படவேண்டுமென ஏற்பாடுசெய்வதுமாகும்.

**வாசகம் 17** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன்,-

(அ) இச்சட்டத்தின் 2 ஆம் வாசகத்தினாலும் 3 ஆம் வாசகத்தினாலும் முதன்மைச் சட்டவாக்கத் துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாவொரு திருத்தமுமாகும் ;

(ஆ) இயைபான எல்லா ஆவணங்களையும் கோப்புக்களையும் பணிப்பாளர் தலைமையதிபதி, பதினான்கு நாட்களினுள் செயலாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென ஏற்பாடு செய்வதுமாகும் ; அத்துடன்

(இ) செயலாளர், அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டை அறுபது நாட்களினுள் கையுதிர்த்தல் வேண்டுமெனவும் குறித்துரைப்பதுமாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் *22அ* என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றதுடன், புதிய பிரிவானது, *1992* ஆம் ஆண்டின் *33* ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின்கீழ் கரையோர வலயத்தினுள்ளான ஏதேனும் இடப்பரப்புக்கான உரிமங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியின் முற்சம்மதத்தைப் பெறாமல் வழங்கப்படுதலாகாதென ஏற்பாடுசெய்வதுமாகும் ; அத்துடன் அதனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை முறையைக் குறித்துரைக்கின்றது.

***வாசகம் 19*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் நான்கு புதிய பாகங்களை உட்புகுத்துவதுடன், பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்வதுமாகும் :-

(அ) "பாதிக்கப்பட்ட இடப்பரப்புக்களை" (பாகம் IIIஅ) வெளிப்படுத்துவதற்காகவும் ; அத்துடன் அத்தகைய இடப்பரப்புகளில் எல்லாச் செயற்பாடுகளையும் தடைசெய்கின்றது ;

(ஆ) "கடற்கரைப் பூங்காக்களையும் பேணல் இடப்பரப்புகளையும்" (பாகம் IIIஆ) வெளிப்படுத்துவதற்காகவும்; அத்துடன் கடற்கரைப் பூங்காக்களை நிருவகிப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு ஏற்பாடுசெய்வதுடன், அறிவியல்சார் கற்கை அல்லது ஆராய்ச்சி நோக்கங்கள் தவிர்ந்த எல்லா அபிவிருத்திச் செயற்பாடுகளையும் பேணல் இடப்பரப்புகளில் தடைசெய்கின்றது ;

(இ) அவ்விடப்பரப்பில் மூலவள முகாமைக்கான ஒத்திசைவானவோர் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டிய தேவையிருக்கும் விடயங்களில் "விசேட முகாமை இடப்பரப்புகளை" (பாகம் IIIஇ) வெளிப்படுத்துவதற்காகவும் ; அத்துடன்

(ஈ) கரையோர வலயத்துக்கான அணுகுகை மார்க்கங்கள் பற்றிய "கரையோர அணுகுகைச் செய்திட்டம்" (பாகம் IIIஈ) ஒன்றைத் தயாரிப்பதற்காகவும் மற்றும் அத்தகைய செய்திட்டத்தைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைமுறைக்காகவும்.

***வாசகம் 20*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *24* ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, கரையோர வலயத்தில் கொண்டுநடாத்தப்படுகின்ற செயற்பாட்டை, அறிவியல்சார் கற்கையையும் ஆராய்ச்சியையும் மேம்படுத்துகின்ற செயற்பாட்டிற்கு மட்டும் வரையறுப்பதுமாகும்.

***வாசகம் 21*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்வதுமாகும் :-

(அ) கரையோர வலயத்தின்மீதான அத்துமீறுதலொன்று ஏற்படும்பட்சத்தில் அல்லது கரையோர வலயத்தினுள் அதிகாரமளிக்கப்படாத செயற்பாடொன்று நிறைவேற்றப்படும்பட்சத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(ஆ) செவ்வையாக்கல் வழிமுறைகளை எடுக்கும்படியும் அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்படாத செயற்பாட்டில் ஈடுபடாதொழியும்படியும் மற்றும் ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படியும் தவறாளர்களைத் தேவைப்படுத்துவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தத்துவமளித்தல் ; அத்துடன்

(இ) தவறாளர், அத்துமீறலை அல்லது அதிகாரமளிக்கப்படாத செயற்பாட்டின் நிறைவேற்றுகையைத் தொடர்ந்துபுரியும்பட்சத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுப்பதற்கும் மற்றும் அவ்வாறு செய்வதில் உறப்பட்ட செலவு, எத்தவறாளருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அத்தவறாளரிடமிருந்து அறவிடப்படுவதற்கும்.

**வாசகம் 22** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், அப்பிரிவில் சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்துக்கான குறிப்பீடொன்றையும் உள்ளடக்குகின்றது.

**வாசகம் 23** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 26அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றதுடன், புதிய பிரிவானது, ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டிலிருந்து விளைகின்ற சேதத்தை அல்லது கெடுதலைத் தடுப்பதற்கான அல்லது தணிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி தத்துவமுடையவராதல் வேண்டுமெனவும் ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 24** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவு, ஆளொருவருக்கு நினைவூட்டலொன்று கொடுக்கப்பட்டபின்னரும்கூட அவர் அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, உரிமமொன்று இல்லாதாக்கப்படுவதற்கும் ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 25** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவு, 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மீறுவதற்காக வழங்கப்பட்ட தண்டங்களை அதிகரிப்பதற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 26** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், அதன்கண்ணுள்ள பிரிவுக்கான குறிப்பீட்டில் விளைவாந்தன்மையினதான திருத்தமொன்றை செய்கின்றதென்பதுடன், அதன்கண் வழங்கப்பட்ட தண்டத்திலான அதிகரிப்பொன்றுக்கும் ஏற்பாடு செய்கின்றது.

**வாசகம் 27** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவு, அதன்கண் வழங்கப்பட்ட தண்டத்திலான அதிகரிப்பொன்றுக்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 28** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவு, செயலாளரினால் மேன்முறையீடுகள் கேட்கப்படுவதில் கூடுதல் வினைத்திறனுள்ள நடவடிக்கைமுறை பின்பற்றப்படுவதற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 29** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 31ஆஆ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றதுடன், புதிய பிரிவானது, கரையொர வலயத்தினுள் அல்லது அதற்கு வெளியே கடல் முருகைக்கற்களைத் தோண்டுதல் தடைசெய்யப்படுதல் வேண்டுமெனவும் ஏற்பாடு செய்கின்றது.

**வாசகம் 30** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 31உ என்னும் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான பிரிவானது மணலை அல்லது கடற்சிப்பிகளை இடம்பெயர்க்கின்ற ஏதேனும் வாகனம், கலன் முதலியவற்றை அல்லது அதனைக் களஞ்சியப் படுத்தியுள்ள ஏதேனும் வளவை, அது சட்டமுறையாகப் பெறப்பட்டுள்ளதாவென்பதை நிச்சயிப்பதற்கெனச் சோதனையிடுவதற்கான தத்துவத்திற்கு ஏற்பாடு செய்வதற்கானதுமாகும்.

**வாசகம் 31** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஊ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவானது, பொலிசு வெகுமதி நிதியத்துக்குப் பதிலாக "கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியம்" என்பது இடப்படுவதற்கும் ஏற்பாடுசெய்கின்றது அத்துடன் நிதியத்தின் நிருவாகத்துக்காகவும் மற்றும் நிதியத்தின் கணக்குகளைப் பேணுவதற்காகவும் ஏற்பாடுசெய்கின்றது.

***வாசகம் 32*** : இவ்வாசகம், *முதன்மைச் சட்டவாக்கத்தில் 31எ மற்றும் 31ஏ என்னும் இரு புதிய பிரிவகளை உட்புகுத்துகின்றதுடன், புதிய பிரிவுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்கின்றன :-*

(அ) *காணியை அல்லது நீர்நிலைகளை நிரப்புதல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றிச் செய்யப்படின் தவறொன்றாதல் வேண்டும் எனவும்; அத்துடன்*

(ஆ) வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்திருக்கும்போது பிணையெதுவும் வழங்கப்படுதலாகாது எனவும்.

***வாசகம் 33*** : இவ்வாசகம், *முதன்மைச் சட்டவாக்கத்தின் 35அ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவு, ஆட்கள் புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் தவறு ஆறு மாதங் களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனையைக் கொண்டிருப்பின், அவர்களைப் பிடியாணையின்றிக் கைதுசெய்வதற்குப் பொலிசாருக்குத் தத்துவமளிக்கின்றதுமாகும்.*

***வாசகம் 34*** : இவ்வாசகம், *முதன்மைச் சட்டவாக்கத்தில் 35அஅ மற்றும் 35அஅஅ என்னும் இரு புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றதுடன், புதிய பிரிவுகளானவை, முதன்மைச் சட்ட வாக்கத்தின்கீழான தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாதல் வேண்டுமெனவும் மற்றும் பொலிசு அலுவலர்கள், அவர்களினால் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட சட்டமுறையான செயல்கள் தொடர்பில் துடர்ச்சியிலிருந்தான பாதிப்பின்மை அளிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டுமெனவும் ஏற்பாடுசெய்கின்றன.*

***வாசகம் 36*** : இவ்வாசகம், *முதன்மைச் சட்டவாக்கத்தின் பொருள்கோடற் பிரிவைத் திருத்துகின்றதுடன், "கரையோர அணுகுவழி", "கரையோர மூலவளன்", "முகாமை", "தொடக்கச் சூழற் பரிசோதனை அறிக்கை", "நிலைபேறாந்தன்மை" மற்றும் "நீர்நிலை" என்னும் சொல் லமைப்புகளுக்குப் புதிய வரைவிலக்கணங்களையும் உள்ளடக்குகின்றது.*

***வாசகம் 37*** : இவ்வாசகம், *முதன்மைச் சட்டவாக்கத்தில் அட்டவணையொன்றை உட்புகுத்து கின்றதுடன், அந்த அட்டவணையானது, இத்திருத்தத்தின் ஏற்பாடுகளின்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினவான, 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, காணிமீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்துக்கும் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்துக்கும் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட, குறித்தசில திருத்தங்களை வரிசைப்படுத்திக்காட்டுகின்றது.*